# (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

ஓ.எஸ்.எண்.166/2021 நாள்21.04.2026

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 நாள் பிரதிவாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர்செல்வம் | தொழில் | |
| த. பெ./க.பெ. | கிருஷ்ண கவுண்டர் | சாதி | |
| கிராமம் | களையூர் | மதம் | இந்து |
| வட்டம் | செஞ்சி | வயது | 53 |

பி.சா.2

குறுக்கு விசாரணை

வாதியான என் சித்தப்பா வீட்டு மனை பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். என் அப்பாவும், வாதியும் 1976 ஆண்டிலேயே வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்களின் சகோதரிகளுடைய சம்மதத்துடன் அவர்கள் பாகம்பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் தாத்தா உள்ளிட்டு வழி வழியாக குடும்பம் இருந்த சொத்து தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். அது நத்தம் புறம்போக்கு. என் தாத்தா வசித்த வீடு கூரை வீடு. வழக்கு சொத்தில் உள்ள கல்வீட்டை என் தகப்பனார் தான் கட்டினார். அதை அரசு மானியம் வாங்கி கட்டினாரா என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் மேற்கு பாதியில் வீடு அமைந்துள்ளது என்றால் சரிதான். கிழக்கில் உள்ள காலி இடத்தையும் நாங்கள் தான் அனுபவிக்கிறோம். மேற்கு பாதி என் தகப்பனாருக்கும், கிழக்கு பாதி வாதிக்கும் ஒதுக்கப்பட்டு தான் அவ்வாறு இருந்து வருகிறது என்றால் சரியல்ல. என் அப்பா பொதுவில் இருந்து வாதிக்கு திருமணம் செய்து வைத்து வேலை வாங்கி கொடுத்தார். அவர் சகோதரிகளுக்கும் அவ்வாறு செய்தார். வாதி 1980 ம் ஆண்டு திண்டிவனத்தில் இடம் வாங்கி வீடு கட்டி விட்டார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு உரிய பாகத்தை விட்டுவிட்டு தான் என் அப்பா வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அது நத்தம் புறம்போக்கு. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை 26.07.2021 அன்று நானும், என் உடன் பிறந்தவர்களும் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். வாதிக்கு தெரியாமல் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து நாங்கள் பாகம்பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களை எழுதி

வாங்கினேன். என் அப்பா தான் குடும்பத்தில் மூத்தவர் என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு அவரது சொத்துக்களுக்கு என் அப்பா பெயரில் தான் பட்டா இருந்ததா என்றால் ஒரு பகுதி அவர் பெயரில் இருந்தது. வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு நிலங்களை பொறுத்து மட்டும் வாதியும் என் அப்பாவும் தனித்தனியாக பட்டா வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். வழக்கு மனையை பொறுத்து மட்டும் வாதி வீடு கட்டாததால் என் அப்பா பெயரில் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. அதை சாதகமாக பயன்படுத்தி நாங்கள் பொய்யாக பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு மனை பூர்வீக சொத்து என்றாலும் அதில் வாதிக்கு பாதி பாகம் உரிமையானது என்றாலும் சரியல்ல.